ரூ. 3. Regd. No. M. 2419.

மாத்வ மித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,

KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol 16 புஸ்தகம் 16 — ஸுபானு ஸம்வத்ஸரம் கார்த்திகமாஸம் 12—11—'43 சுக்ரவாரம் — No. 6 நெ. 6

24 NOV 1943 MADRAS

நெ.	பொருளடக்கம்	பக்கம்.
1	ஸ்ரீ பகவத் கீதை	119
2	ப்ரஹ்ம ஸூத்திரம்	123
3	ஸ்ரீ மத்வ விஜயம்	127
4	த்வைத வேதாந்த பால சிக்ஷா	130
5	ஆசாரமாலை	134
6	ஸங்க்ரஹ ராமாயணம்	138
7	ஓர் கண்டனம்	140
8	ஓர் செய்தி	141
9	அறிவிப்பு	142
10	விசேஷ தினங்கள்.	142

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே
ஒரு கண் கொடை யெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஹம்பி வெங்கட்ராமையர் & ஸன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:- பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி.
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

சப் ஆபீஸ்: 48, பெரியதெரு,
கும்பகோணம்

ஆசிரியர் ஆத்யம் பாகவத
ரங்கநாதாசாரியார்

மாத்வமித்திரன்

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீ மத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வ வகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீ மத்வமதத்தை ஸுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும்

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம்,
கும்பகோணம்.

ओं श्री गुरुभ्यो नमः

மாத்வ மித்திரன்.

ஸ்ரீ பகவத்கீதை
2-வது அத்யாயம்

ஸாங்க்ய யோகம்

(முன் 98ம் பக்கத் தொடர்ச்சி).

स्वधर्ममपि चावेक्ष्य नविकंपितुमर्हसि ।
धर्म्यात्धि युत्धाच्छ्रेयो ऽन्यत् क्षत्रियस्य नविद्यते ॥ ३१ ॥

31 ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய நவிகம்பிதுமர்ஹஸி
தர்ம்யாத்தி யுத்தாத் ச்ரேயோன்யத் க்ஷத்திரியஸ்ய ந
வித்யதே

ச மற்றும் ஸ்வதர்மம் அபி யுத்தம் செய்வது க்ஷத்திரியனுடைய தன்னுடைய தர்மம் என்று அவேக்ஷ்ய தெரிந்துகொண்டு விகம்பிதும் சரீரத்தில் எல்லா அவயவங்களிலும் நடுக்கமடைய ந அர்ஹஸி அருகனாய் ஆகமாட்டாய். க்ஷத்திரியஸ்ய க்ஷத்திரியனுக்கு தர்ம்யாத் தர்மத்தைத் தருவதாயுள்ள யுத்தாத் யுத்தம் செய்வதைவிட அன்யத் வேறான ச்ரேயః ச்ரேயஸ் ஸாதனமானது ந வித்யதே கிடையாது ஹி இது பிரசித்தமே.

அர்ஜுனன்:— கிருஷ்ணா! நீங்கள் செய்த ஆத்மதத்வ உபதேசம் என் புத்தியில் ஏறாமல் அடிக்கடி துக்கம் ஏற்படுகிறது. அப்படியிருக்க சொந்தஜனங்களின் ஹிம்சாரூபமான யுத்தத்தில் எப்படி பிரவிருத்திப்பேன்?

கிருஷ்ணர்.— நான் செய்த தத்வோபதேசம் இப்போது உன் புத்தியில் ஏறாதிருக்கட்டும். கர்மயோகத்தை நீ அனுஷ்

டானம் செய்வதாகிய பகவத் ஆராதனையால் ஏற்படும் பகவத் ப்ரஸாதத்தால், சம்பூர்ணமாய் தோஷம் விலகிப்போன மனதில், இந்த உபதேசம் தானாகவே நல்ல புத்தியை உண்டாக்கும். தற்போது வேறு விதமாய் உன்னை உன் ஸ்வதர்மமான யுத்தத்தில் பிரவிருத்திக்கச்செய்கிறேன். நான் சொல்வதைச் சாவதானமாய் கேள். ச முன்னடி சொன்னது இருக்கட்டும். யுத்தம் ஸ்வதர்மம் என்பதை யோசித்துத் தெரிந்துகொள். க்ஷத்திரியனான உனக்கு யுத்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது உன் ஸ்வதர்மம் உன்னைச் சேர்ந்த தர்மம். ஸ்வதர்மம் ஸ்வதந்திரமாய் இருப்பதால் ஸ்வ என்னும் பதத்தால் சொல்லப்படுபவரான பகவானுடைய தர்மம். அவருடைய ப்ரீதியை உண்டுபண்ணும் தர்மம். அந்தக் காரணத்தாலும் அது ஸ்வதர்மம். உன்னுடையதான தர்மம் ஆகும். ஸ்வதர்மம் ஸ்வம் என்றால் பணம். அதை சம்பாதித்துத் தரும் தர்மம். ராஜ்யத்தால் பணம் வருவதால் அது ஸ்வதர்மம் ஆகும். பிரயாசைப்பட்டு சம்பாதித்த பணத்தின் செலவால் மட்டில் ஸாத்யமான யாகாதிகளைவிட இது உத்தம தம்மமாகும். ஹிம்சா ரூபமானதால் யுத்தம் அதர்மமாய் இருக்க அது ஸ்வதர்மம் எப்படி ஆகும் என்றால், அது ஸ்வதர்மமே. ஸு + அதர்மம் மிகவும் அதர்மமானாலும், ஸ்வ உனக்கு விஹிதமான தர்மமாதலால் அது ஸ்வதர்மமாய், ஸ்வ எனப்படும் பகவானுக்கு ப்ரீதியைத் தரும் தர்மமாகும். அப்பேர்ப்பட்டதாயுள்ள ஸ்வதர்மத்தை, புத்தியைக்கொண்டு யோசித்தாலும் ந விகம்பிதும் அர்ஹஸி நடுக்கத்தை அடைய அருகனாய் ஆகமாட்டாய். "வேபதுஸ்ச சரீரே மே" என்று நீ முன்னடி சொன்னது சரியன்று. ந விகம்பிதும் அர்ஹஸி ஆகையால் யுத்தத்தினின்றும் சலனமடையலாகாது. ஆகையால் "ஏதான் ந ஹந்துமிச்சாமி, நயோத்ஸ்யே, கதம் பீஷ்மமஹம் ஸங்க்யே" என்றெல்லாம் நீ சொன்னது சரியன்று. ஆகையால் நீ யுத்தம் செய்யவேண்டியதுதான் ஸ்வதர்மம். க்ஷத்திரியனான உனக்கு விஹிதமாயுள்ள யுத்தத்தினின்றும் ஓடாதிருப்பதான ஸ்வதர்மத்தை அறிந்துகொண்டு, விகம்பிதுக யுத்தத்தை விட்டு ஓட்டம் பிடிக்க ந அர்ஹஸி அருகனாய் ஆர்

மாட்டாய். "சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்ய பலாயனம்." என்று மூன்றாடி சொல்லப்படுகிறது. யுத்தம் ஸ்வ தர்மம் என்று அறிவதாலும், யுத்தத்தினின்றும் ஓடாதிருப்பது ஸ்வதர்மம் என்று அறிவதாலும் நீ யுத்தம் செய்யவேண்டியது தான்.

இப்படி ஏன் என்னை நிர்பந்தப்படுத்துகிறீர்? வேறு ஏதாவது ச்ரேயஸ்ஸின் ஸாதனத்தைச் சொல்வதுதானே! அதை அனுஷ்டிக்கிறேன் என்று அர்ஜுனா! சொல்வாயோ, தர்ம்யாத் யுத்தாத் ச்ரேயோன்யத் க்ஷத்திரியஸ்ய ந வித்யதே தர்ம்யாத் தர்மத்தினின்றும் நழுவாதிருப்பது தர்ம்யாத் பரலோக சுகமாகிய தர்மத்தை உண்டுபண்ணுவது தர்ம்யாத் தரிப்பவராயிருப்பதால் தர்மர் எனப்படும் பகவானின் பூஜா ரூபமானது. அவருடைய ப்ரீதியை உண்டுபண்ணுவது. தர்ம்யாத் தர்ம சாஸ்திரத்தினின்றும் வெளி வந்திருப்பது. தர்ம்யாத் செய்யப்படவேண்டுமென்று விஹிதமானதாய் ஏற்பட்டது. தர்ம்யாத் பின் திரும்பிஓடாதிருக்க வேண்டும் என்ற தர்மத்துடன் கூடியது, அப்பேர்ப்பட்ட யுத்தத்தைவிட ச்ரேய: ச்ரேயஸ் ஸாதனமானது, ச்ரேய: ச்ரேஷ்டமான காரியமானது க்ஷத்திரியஸ்ய ந வித்யதே க்ஷத்திரியனுக்கு இல்லை ஹி இது பிரமாண சித்தமே. "யே யுத்யந்தே ப்ரதனே ஷூராஸோ யே தனுத்யஜ:" என்று சுருதியில் யுத்தம் ச்ரேயஸ்ஸாதனம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "க்ஷத்திரியோ ஹி ப்ரஜா ரக்ஷன் சஸ்த்ரபாணி: ப்ரதண்டவான்| நிர்ஜித்ய பரஸைன்யானி க்ஷிதிம் தர்மேண பாலயேத்" என்கிறது பாராசர ஸ்மிருதி. 'ஸமோத்தமாதமை: ராஜா சாஹூத: பாலயன் ப்ரஜா:| ந நிவர்த்தேத ஸங்க்ராமாத் க்ஷாத்ரம் தர்ம மனுஸ்மரன்| ஸங்க்ராமேஷ்வ நிவர்த்தித்வம் ப்ரஜானாம் சைவ பாலனம்| ச்ருஷூஷா ப்ராம்மணானாம் ச ராக்ஞ: ச்ரேயஸ்கரம் பரம்" என்கிறது மனு ஸ்மிருதி. க்ஷத்திரியர்களுக்கு ச்ரேயஸ் ஸாதனமானவைகள் இதரங்கள் இருக்க "அன்யத் ந வித்யதே" வேறு எதும் இல்லை என்று எப்படி சொல்லப்பட்டது என்றால் "நஹி நிந்தா நிந்தி தும் ப்ரவ்ருத்தா கிம்து விதேயம் ஸ்தோதுமேவ" என்னும்

ந்யாயத்தின்படியும் "அபசவோ வா அன்யே கோ அச்வேப்ய:" என்னும் வாக்யத்தில் சொல்லப்பட்டபடியும், ஸ்தோத்திரம் செய்யப்பட பிரஸித்திக்கப்பட்டிருக்கும் யுத்தத்தை ஸ்தோத்திரம் செய்ய இவ்வாறு சொன்னதாய் அர்த்தம் கொள்ளலாம். யுத்தம் செய்தால் அதனால் ஜயமும், அதனால் பணமும், அதனால் யாகம் முதலான புண்ய கர்மாக்களும், அதனால் சித்த சுத்தியும், அதனால் க்ஞானமும், அதனால் மோக்ஷமும், ஏற்படுவதால் யுத்தம் ச்ரேயஸ் ஸாதனமென்பது அறியப்பட வேண்டியதாகும். ஆகையால் "ந ச ச்ரேயோனு பச்யாமி ஹத்வா ஸ்வஜன மாஹவே| ந காங்க்ஷே விஜயம் கிருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகானி ச| கிம் நோ ராஜ்யேன கோவிந்த கிம் போகைர் ஜீவிதேன வா" என்று நீ சொன்னது சரியல்ல. ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய என்று சொன்னதைக் கொண்டு ஸ்வதர்மம் என ஏற்பட்டிருக்கும் யுத்தத்தில், ஸ்வதர்மமாகிய யாகத்தில் பசு ஹிம்ஸை நடக்கிறதே என்னும் தோஷத்தை எப்படி பார்க்கலாகாதோ, அப்படி பந்துஜனங்களின் ஹிம்ஸை நடக்கிறதே என்பதைப் பார்க்கலாகாது என்பதும் சூசிக்கப்பட்டதாய் ஆகும். யாகத்தில் பசு ஹிம்ஸை "ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி" என்னும் சுருதியைக் கொண்டு தடுக்கப்பட்டு அதர்மமாக இருந்த போதிலும் "அக்னீஷோமீயம் பசுமாலபேத" என்னும் சுருதியைக்கொண்டு விஹிதமானதாய் எப்படி தர்மமாய் அனுஷ்டிக்கப்படுகிறதோ அப்படித்தான், யுத்தமானது ஹிம்ஸா ரூபமானதால் அதர்மமாய் இருப்பினும் க்ஷத்திரியனான உனக்கு விஹிதமானதால் அது உனக்கு தர்மமாய் ஆகி உன்னால் அனுஷ்டிக்கப்பட வேண்டியது தான்.

यदृच्छयाचोपपन्नं स्वर्गद्वारमपावृतं ।
सुखिनः क्षत्रियाः पार्थलभंते युध्दमीदृशं ॥ ३२ ॥

32 யத்ருச்சயாசோபன்னம் ஸ்வர்க்கத்வாரமபாவ்ருதம்!
ஸுகின: க்ஷத்திரியா: பார்த்த லபந்தே யுத்தமீத்ருசம் ||

ஸ்ரீமத்வபாஷ்ய அர்த்த ஸங்கிரஹத்துடன்

ப்ரம்ம ஸூத்திரம்

[ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் எழுதுவதாவது]

1-வது அத்யாயம் 3வது பாதம்

8வது தேவதாதிகரணம்

(முன் 63ம் பக்கம் தொடர்ச்சி)

ओं शब्द इति चेन्नातः प्रभावात् प्रत्यक्षानुमानाभ्याम् ओं ॥ २८ ॥

28 ஓம் சப்த இதி சேன்னாத: ப்ரபவாத் ப்ரத்யக்ஷானு மானாப்யாம் ஓம்

சப்தே தேவர்களுக்கு ஆதி அந்தம் இருப்பதைக்கொண்ட வேதத்தில் விரோத: இதிசேத் அப்ரமாண்யமாகிய விரோதம் உண்டாகுமே அதாவது சுருதி சித்தமான வேதவாக்யங்களுக்கு ஒரு சமயம் அதனால் சொல்லப்படுவது—அதாவது வாச்யமானது இல்லாததன் நிமித்தம் அப்ராமாண்யமாகிய தோஷம் வருமே, என்று ஆக்ஷேபணை சொன்னால், ந அது சரியன்று; அத, "தாதா யதா பூர்வமகல்பயத்" என்னும் வேத வாக்யத்தாலும் ப்ரத்யக்ஷானுமானாப்யாம் மகான்களின் ப்ரத்யக்ஷத்தாலும் அப்படியே "உபரிதன கால: தேவாதிமான், அப்ராளய காலத்வாத், ஸம்பிரதிபன்ன காலவத் என்னும் அநுமானத்தாலும் அதாவது தேவர்களுக்கு ப்ரவாஹத: தொடர்ச்சியாய் உற்பத்தி ஸாதகமான அடையாளத்தாலும் ப்ரபவாத் ஒவ்வொரு கல்பத்திலேயும் தேவர்களுக்கு நிச்சமாய் உற்பத்தி தெரிய வருவதாலும் மேலே சொன்னது யுக்தமே ஆகும் என்றார்.

பிந்திய ஸூத்திரத்தில் சொல்லப்பட்டதற்கு மேல் ஆக்ஷேபணையாவது:—தேவர்களுக்கு ஆதி அந்தம் இருப்பதாய் வேதம் சொல்லும் பக்ஷத்தில் வேதத்திற்கு அப்ராமாண்யம் என்னும் விரோதம் சம்பவிக்கும், ஏனெனில் வேதம் நித்யமே. அதில் சொன்ன தேவர்களோ அநித்யர்கள். அநித்யமான தேவர்

களுக்கு நித்யமான வேதத்தால் வாச்யத்வம் சொல்லப்படும் தன்மை ஏற்படுகிறது. ஒரு வாக்யத்திற்கு அதன் சொல்லப்படுவது இல்லாமல் இருக்குமேயானால் ப்ராமாண்யம் ஏற்படாது. சச ச்ருங்கம் முளைத்திருக்கிறது என்னும் வாக்யம் அதனால் சொல்லப்படுவது இல்லாமல் இருப்பதால், அந்த வாக்யத்திற்கு ப்ராமாண்யம் ஏற்படவில்லை. ஆகையால் வாக்யத்திற்கு அதனால் சொல்லப்படுவது இல்லாமல் இருப்பதே அப்ராமாண்யமாகும். வேதம் எப்படி நித்யமாகும் என்று கேட்டாலோ, ரிக்வேதத்தில் "தஸ்மை நூனமபித்யவே வாசா விரூப நித்யயா, வ்ருஷ்ணே சோதஸ்வ ஸுஷ்டுதிம்" விரூபன் என்னும் ரிஷியைப் பார்த்து பகவான் சொன்னதாவது: ஹே விரூப! நாற்புறமும் ப்ரகாசம் கொண்டதுமானதும், மிகவும் சமர்த்தனுமான அந்த பகவானைக் குறித்து நித்யமான அதாவது உற்பத்தியும் நாசமும் இல்லாததான வசனமாகிய வேதத்தால் அழகான ஸ்தோத்திரத்தைச் செய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் வேதம் அநித்யம் என்றால், அதற்கு ப்ராமாண்யம் இல்லாதிருத்தலும் ஏற்படும். ஆப்திமூலமாய் வேதத்திற்கு ப்ராமாண்யம் இருக்கட்டுமே என்றால் ஆப்தியின் நிச்சயமோ இல்லை: ஏனெனில் வேதம் இன்னாரால் செய்யப்பட்டது என்பதிலும். அவர் ஸர்வக்ஞர் என்பது முதலானவைகளிலும், ப்ரமாணம் இல்லாததால், வேதத்தில் ஆப்தி இருக்கிறது என்பதை நிச்சயம் செய்யமுடியாது. மேலும் வேதம் ஆப்தி கொண்ட புருஷனால் அதாவது ஓர் ஆப்தனால் செய்யப்பட்டிருக்குமேயானால், அந்த ஆப்திக்கு மூலமான ஓர் ப்ரமாணத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அந்த ப்ரமாணம் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணமாக இருக்கமாட்டாதாகலால், ஓர் வாக்யத்தைத்தான் ஆப்திக்கு மூலமாகக் கொள்ளவேண்டும். அந்த வாக்யம் ஒரு புருஷனுடையதாக அதாவது பௌருஷேயமாக இருக்கும்பக்ஷத்தில், அந்த வாக்யத்திற்கும் ஆப்தியின் நிச்சயம் ஏற்படமாட்டாது. ஆகையால் அந்த வாக்யத்திற்கு நித்யத்வம்தான் ஒப்புக்கொள்ளவேண்டி வரும். இப்படி அந்த வாக்யத்திற்குக் கடைசியில் நித்யத்வம் சொல்லிவிடுவதைவிட, ச்ருதியால் நித்யம் என்று சொல்லிவிடப்

பட்டிருக்கும் அதாவது சுருதிசித்தமாயுள்ள வேதத்தின் நித்யத்வத்தை ஒப்புக்கொள்வது மேலானது வேதத்திற்கு நித்யத்வம் இருப்பினும், அதற்கு ஆப்தனால் சொல்லப்பட்டிருக்கும்தன்மை அதாவது ஆப்தோக்த்வம் இல்லாததால், ப்ராமாண்யம் இல்லை என்றால், ப்ரமாணத்தின் விஷயத்திற்கு அதாவது ப்ரமாவுக்கு க்ஞான காரணத்தைத்தவிர வேறு எந்தக்காரணமும் வேண்டியதில்லையாதலால், வேதத்திற்கு அதன் கர்த்தாவின் குணபூதமாயுள்ள ஆப்தி என்பதை ஒப்புக்கொள்ள ஆவசியமில்லாமலேயே, ஸ்வதாவாய் க்ஞானஸாமான்யத்திற்குக் காரணமென்றே வேதத்தால் ஏற்பட்ட க்ஞானத்திற்கு யதார்த்தரூபமான ப்ராமாண்யமானது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதன்நிமித்தம் ஏற்படுகிறது. ஆக வேதம் நித்யமாய் இருப்பதால், அதன் வாச்யமாயுள்ள தேவர்களுக்கு அநித்யத்வம் இருக்கும்பக்ஷத்தில், அந்த வேதத்திற்கு அப்ராமாண்யம் ஏற்படும். மேலும் பூர்வகல்பத்தில் ஒரு தேவதை இல்லாதிருந்தாலும், வேறு தேவதை இருப்பதால் யக்ஞாதிகளின் கர்மாவில் உத்தேசிக்கப்பட்டவர் இல்லை என்ற விரோதம் எப்படி ஏற்படுவதில்லையோ, அப்படி ஒரு தேவதையின் நாசம் இருந்தாலும் மற்றொரு தேவதையின் உற்பத்தி இருப்பதால், வேதத்திற்கு வாச்யஹீனத்வம் அதனால் சொல்லப்படுவது இருப்பது என்னும் விரோதம் நீங்கும் என்று சொல்லலாமே என்றால் அப்படிச் சொல்வதற்கில்லை. பூர்வகல்பத்தில் "யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:" என்று தேவதா ப்ரவாஹம் அதாவது தேவர்களின் தொடர்ச்சி இருந்ததாய் ப்ரமாணம் இருக்கிறது. அதனால் அதீதமான காலத்தில் நடந்தவைகளுக்கு விரோத பரிகாரம் ஏற்படும். உத்தரகாலத்தில் இதர தேவர்கள் இருப்பார்கள் என்ற நியமத்திற்கு ப்ரமாணம் இல்லை. அதனால் உத்தரகாலத்தில் ஏற்படுபவைகளுக்கு விரோதம் தானாக வந்து சேரும்.

என்றிவ்வாறு பூர்வபக்ஷம் செய்யப்பட்டால் அதற்கு ஸ்ரீ வேதவ்யாஸரால் அடியிற்கண்டபடி ஸித்தாந்தம் செய்யப்படுகிறது. வேதத்திற்கு அப்ராமாண்யம் ஏற்படாது. ஏனெனில் அதனால் சொல்லப்படும் தேவர்களுக்கு அவர்களின் சொரூ

பத்தால் நித்யத்வம் இல்லாமல் இருப்பினும், அடுத்தடுத்து அவர்களின் உற்பத்தி நிச்சயமாதலால் ப்ரவாஹரூபமாய் அவர்களுக்கு நித்யத்வம் ஏற்படுகிறது. அவர்களுக்கு அடுத்தடுத்து உற்பத்தி இருப்பதாய் எப்படி ஏற்படுகிறதென்றால் ப்ரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் ஆகிய மூவகை ப்ரமாணங்களாலும் ஏற்படுகிறது. " ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா யதாபூர்வ மகல்பயத் " ஜகத்துக்கு தாரணம் போஷணம் இவைகளைச் செய்யும் விஷ்ணு பூர்வ கல்பத்தில் சூர்யசந்திரர்களை எப்படி சிருஷ்டித்தாரோ, அப்படித்தான் இந்த கல்பத்திலேயும் சிருஷ்டித்தார் என்று ஆகமமாகிய வேதத்திலேயும் பிரமாணம் இருக்கிறது. " யதைவ நியம: காலே ஸர்வாதி நியமஸ்ததா | தஸ்மாத் நாதீத்ருசம் க்வாபி விச்வமேதத் பவிஷ்யதி " எப்படி முன் கல்பத்தின் முடிவிலேயும், எப்படி முன் யுகத்தின் முடிவிலேயும் மீண்டும் கல்பம் யுகம் இவைகளின் உற்பத்தி இருப்பதாய் கால விஷயத்தில் உற்பத்திநியமம் இருக்கிறதோ, அப்படித்தான் தேவாதிகளுக்கு பூர்வ பூர்வகல்பத்தின் முடிவில் புன: புன: அந்யதேவர்களின் உற்பத்தி நியமம் உண்டு. ஆகையால் விஷ்ணுவிடமிருந்து இந்த சேதனாசேதனாத்மகமான ஜகத்து இந்திரன் முதலான பெயர்கள் இல்லாமல் இருப்பதில்லை, என்று ஸ்பஷ்டமாய் ஒர் ஸ்மிருதி ப்ரமாணமும் இருக்கிறது. மேலும் நடந்தது, இனி நடக்கப்போவது இவைகளை அறிந்தவர்களின் ப்ரத்யக்ஷமும் இதற்கு ப்ரமாணம். " யதர்த்துஷ்வ்ருது லிங்கானி நானாரூபாணி பர்யயே | த்ருச்யந்தே தானி தான்யேவ ததா பாவா யுகாதிஷு " என்று மகாபாரதத்தில் க்ஞானிகளின் ப்ரத்யக்ஷம் இருப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் தேவர்களின் உற்பத்தி நியமம் உண்டு என்று சித்திக்கிறது. வேதத்திலேயும் ப்ரத்யக்ஷத்திலேயும் விசுவாசமில்லாதிருப்பவர்களுக்கு இந்த நியமமுண்டு என்று எப்படி நிச்சயம் ஏற்படும் என்றால் தற்போது நடந்துவரும் காலத்தில் தேவர்கள் எப்படி இருக்கின்றனரோ அவ்வாறேதான் இனி நடைபெறப் போகும் காலத்தில் தேவர்கள் இருப்பார்கள் என்று மகான்களாய் அல்லாத சாமானியர்கள் யுக்தியாலும் அனுமானத்தாலும் ஊகிக்கலாம்.

(தொடரும்)

ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீமத்வ விஜயம்

15-வது ஸர்க்கம்.

(முன் 103-ம் பக்கத்தொடர்ச்சி)

85. தேவரீர் இயற்றிய மேற்கண்ட பாஷியங்கள் ஸ்தோத்திரங்கள் காதை முதலானவைகள், எப்படி சிந்தாமணி மாணிக்யம் முதலானவைகள் அளவில் சிறிதாயிருப்பினும், அமிதமான அபீஷ்டங்களைத் தருகின்றனவோ, அப்படி அளவில் வார்த்தைகளில், மிதமாய் இருப்பினும், அமிதமான அர்த்தங்களை அறிவிப்பதாய் இருப்பதால், அவைகள் சின்னம் சிறுசுகள் என்று எண்ணங்கொண்ட மந்தபுத்தியுள்ளவர்களைக் கண்டு ஸஜ்ஜனர்களின் ஸபை உரக்க நகைக்கிறது. 86. இப்பேர்ப்பட்டதாய் தேவரீருடைய உத்தமநூல்கள் இருப்பினும், முன்பு இந்திராதி உத்தம தேவர்கள் இருப்பினும், தாரகாஸுரனை ஸம்ஹரிக்க வேறு தேவதையாகிய ஸுப்ரம்மண்யன் தேவர்களால் விரும்பப்பட்டதுபோல், என்னுல் தேவரீரிடமிருந்து மற்றொரு நூல் புறப்பட விரும்பப்படுகிறது. 87. அநேக யுக்திகள் நிறைந்த பரம கம்பீரமான தேவரீருடைய மேற்கண்ட நூல்களிலிருந்து, தேவரீர் அபிப்பிராயப்பட்ட யுக்திகளை எங்கள் மந்தபுத்தியைக் கொண்டு உத்தாரம் செய்ய அறியப்படமுடியாமல் இருக்கின்றன, ஆகையால் வியக்தமாய் தர்கசமூகங்களை அறிவிக்கும் ஓர் புதிய கிரந்தத்தை தேவரீர் இயற்றவேண்டும். 88. என்றிவ்வாறு ஸ்ரீ த்ரிவிக்ரம பண்டிதாசாரியாரால் பிரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ மத்வாசாரியார், துர்வாதிகளாகிய பிறமதத்தார்களின் அகங்காரமாகிய மலைக்கு வஜ்ராயுதம் போன்றதும், மாயிகளின் மதமாகிய அத்வைத மதமாகிய இருளை அழிக்கும் சூரியனின் காந்திபோன்றதும், ஸஜ்ஜனர்களுக்கு அமிர்தம்போல் ஆனந்தத்தைத் தருவதுமான அனுவ்யாக்யானம் என்னும் நூலை இயற்றினர். 89. சதுரரான ஸ்ரீ மத்வாசாரியார் ஒரு சமயம் அனுவ்யாக்யானம் நான்கு அத்யாயங்களையும் சேர்ந்தாற்போல் மனதில் இயற்றி,

அதை நான்கு சிஷ்யர்களைக்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு அத்யாயமாக ஓரே காலத்தில் விளையாட்டாய் அவர்களுக்குத் தொடர்ந்து சொல்லி எழுதவைத்தார். 90. ஸ்ரீ மத்வாசாரியார் இந்த அநுவ்யாக்யானம் என்னும் நூலில் தான்சொன்ன பொருத்தமான யுக்திஸமூகங்களுக்கு பண்டிதச்ரேஷ்டர்களாலும் செய்ய முடியாததான விவரணரூபமான வ்யாக்யானமாகியதும் அநுவ்யாக்யானத்தில் சொன்ன பூர்வபக்ஷத்திற்கு ஸித்தாந்தமாக உள்ளதுமான நியாய விவரணம் என்ற மற்றொரு நூலையும் இயற்றினார்.

தம்பி விஷ்ணுதீர்த்தரின் சரிதை

91. ஸ்ரீ மத்வாசாரியாராகிய சந்திரனுடன் தினம் சம்பந்தம் பெற்று அதனால் அக்ஞானமும் தாபத்ரயங்களும் விலகிய மனதுடையவர்களாய் வைகுண்டம் சென்றவர்களான அவருடைய தாய்தந்தையர்களுக்கு சரமக்ரியைகளைச் செய்துவிட்டு, அவருடைய வீட்டில் அவருடைய தம்பி வாசம் செய்துவந்தார். 92. விதியின் புருவம் அசைந்த மாத்ரத்தால் ஸ்ரீ மத்வாசாரியாரின் தனங்கள், தானியங்கள், பசுக்கள் முதலான ஸம்பத்து எல்லாம் போய்விடவும், அதனால் வைராக்யம் அடைந்த வேதவித்தான அந்த ஸ்ரீ மத்வாசாரியாரின் தம்பி வேதபாஷ்யகாரரான ஸ்ரீ மத்வாசாரியாரிடம் வந்துசேர்ந்தார். 93. தனக்கு ஸந்யாஸம் கொடுக்கவேண்டும் என்று ப்ரார்த்திப்பவரும் அடுத்தடுத்து அவருடைய பாதத்தில் நமஸ்கரிப்பவருமான ஸ்ரீ மத்வாசாரியாரின் தம்பியை, பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார், தற்போது சாதுர்மாஸ்யமானதால் ஸந்யாஸம் தர சரியான ஸமயமன்று; பிறகு பார்த்துக்கொள்வோம், என்று ஸந்யாஸம் அளிக்க அருகமான காலத்தை எதிர்பார்த்து அவரை தன் வீட்டிற்குப் போய் அங்கு இருக்கும்படி அனுப்பினார். 94. தன் ஜ்யேஷ்டரான ராமசந்திரனுடைய வரவை எதிர்பார்த்து ராமானுஜரான பரதன் எப்படி நந்திக்ராமத்தில் வசித்து வந்தாரோ அப்படி ஸந்யாஸம் பெறும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவரும், ஸந்யாஸம் பெறுவதில் ஸ்திரமான புத்தி கொண்டவருமான அந்த மத்வானுஜர், தன் ஜ்யேஷ்டரான

ஸ்ரீ மத்வாசாரியாரையே அத்தனைகாலம் தியானம் செய்து கொண்டு அவர் வரும்வரை போஜனம் செய்யவில்லை, தூங்க வில்லை, சிரிக்கவில்லை, என்றால் எதிலேயும் அவர் மனம் செல்ல வில்லை. 95. ஸ்ரீ மத்வாசாரியார் அவருடைய விட்டுப்பிரிதலைக் கேட்டு மிகவும் துக்கப்பட்டு, அதைச் சகிக்கமாளாதிருக்கும் ஜய ஸிம்ஹ ராஜனை மிகவும் சிரமப்பட்டு நல்ல வார்த்தையைச்சொல்லி அவனுடைய ராஜ்யத்தில் இருக்கச்செய்து, சரத்காலம் முடிந்த வுடன் தன் அவதாரஸ்தலமான பாஜகக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தார். 96. தாய்வம்சம் தந்தைவம்சம் இவ்விரண்டு குலமும் சுத்தமாயிருப்பதைக் கொண்டவரும், சுருதிகளின் அர்த்தத்தை மனதில் கொண்டவரும், மனோவாக்காயங்களால் பரிசுத்தி அடைந்தவரும், ஜீவத்ச்ராத்தம் முதலான பித்ருசடங்குகளை எல்லாம் செய்து முடித்துக்கொண்டவரும், சப்தாதி விஷயங் களை அனுபவித்து விஷயங்களில் வைராக்யம் அடைந்தவருமான தன் தம்பியை ஸ்ரீ மத்வாசாரியார் ஸன்யாஸம் கொடுத்து ஸன்யாஸி ஆக்கினார். 97. பஞ்சாக்னிமத்யத்தில் தவம் செய்ப வர்களும்கூட எதை அறியமாட்டார்களோ அப்பேர்ப்பட்டதான பரமரஹஸ்யமாயுள்ள ப்ரம்மமாகிய ப்ரணவமந்திரத்தை, ப்ரம்மா வுக்கு ஸமானரான ஸ்ரீ மத்வாசாரியார், ஸன்யாஸம் பெற்ற அவ ருடைய தம்பிக்கு உபதேசம் செய்தார். 98. நட்பாகிய அமிர்தத்தால் ப்ரஸன்னமான முகமுள்ளவராய், மந்தஹாஸத் துடன் கூடிய கடைக்கண்ணால் அவரைப் பார்ப்பவராய், ஆனந்த தீர்த்தரான ஸ்ரீ மத்வாசாரியார் ஸன்யாஸம் பெற்ற தன் தம்பி க்கு ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் என்ற திருநாமத்தை அளித்தார். 99. வேதாந்த உபதேசம் செய்பவரான ஸ்ரீ மத்வாசாரியாரின் ஸகோதரரான ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் வேதாந்தசாஸ்திரமாகிய உபநிஷத் பாஷ்யத்தை சிரவணம் செய்வதாலும், சிரவணம் செய்ததை அனுவாதம் செய்து சொல்வதாலும் சிரவணம் செய் ததை சிந்தனைசெய்வதாகிய மனனத்தாலும் பொழுதை வீணாக்க வில்லை. (தொடரும்)

த்வைத வேதாந்த பால சிக்ஷை

பெரிய பாடம்

---

1 ஸத்குருவின் மகிமை

(முன் 110ம் பக்கம் தொடர்ச்சி)

ஸத்குருவின் மகிமையையும் அவர் சிஷ்யருக்கு உபதேசம் செய்யும் விதியையும் ஸ்ரீ மத்வாசாரியார் யதிப்ரவணகல்பம் என்னும் நூலில் விளக்கியிருப்பதால் அந்நூலின் மூலமும் அர்த்தமும் இச்சந்தர்ப்பத்தில் பிரசுரிக்கப்படுகிறது.

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

யதிப்ரணவ கல்பம்,

1 ஸமீச்சர்வாஜ்யகான் ஹுத்வா ஸம்யக் புருஷஸூக்ததः I
ஸர்வேஷாம் அபயம் தத்வா விரக்தः ப்ரவ்ரஜேத் ஹரிம் II

இந்த நூலில் ஸன்யாஸாசிரமம் பெற்றவர் செய்யவேண்டிய தர்மம் இன்னது என்பதை ஸ்ரீ பகவத்பாதாள் விளக்குகிறார். பகவானைத் தவிர்த்துள்ள இதர வஸ்துக்கள் எல்லாமே ஹேயம்-துச்சம் என்னும் புத்தியைக் கொள்வதாகிய வைராக்யம் பெற்ற ஒருவர், உலகிலுள்ள ஸமஸ்தமான ப்ராணிகளுக்கும் தன்னால் எந்த கெடுதலும் ஏற்படமாட்டாது என்று அபயப்ரதானம் செய்துவிட்டு, புருஷஸூக்தத்திலுள்ள மந்திரங்களால் அவைகளின் சந்தஸ், ரிஷி, தெய்வதம் முதலானவைகளைச் சொல்லி, உதும்பரம், பலாசம், அசுவத்தம் விருக்ஷங்களின் ஸமித்துக்களையும், பக்வான்னம் முதலான சருக்களையும் பசும் நெய்யையும் அக்னியில் ஹோமம் செய்துவிட்டு. ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடையவேண்டும். சரணாகதி செய்வது ஸன்யாஸமாகுமேயன்றி ஸர்வ கர்மாக்களை விடுவது ஸன்யாஸமாகாது.

2 சீருத்வா பாகவதம் சுத்தம் ஆசார்யம் சரணம் வ்ரஜேத் I
அதீஹி பகவோ ப்ரம்மேத்யஸ்மை ப்ரூயாத் தரும் பரம் II

அந்த வைராக்யம் பெற்றவர் தனக்கு ஸன்யாஸம் அளிக்கும் ஆசாரியன் நாராயணருடைய பக்தராயும் துஷ்டஸஹவாஸ

மில்லாமல் சுத்தராயும் இருப்பதைக் கேட்டு, அவரை முதலில் சரணாகதி செய்யவேண்டும். "பூஜ்யஸ்வரூபமுள்ள குருவே! குண பரிபூர்ணராய் வாஸுதேவன் என்னும் நாமம் படைத்திருக்கும் பரப்ரம்மத்தை எனக்கு உபதேசம் செய்யும்" என்று சிஷ்யன் கேட்கவேண்டும். இவ்வாறு சிஷ்யன் சரணாகதி செய்து ப்ரச்னம் செய்தவுடன் ஸர்வச்ரேஷ்டரான பகவானின் ஸ்வரூபத்தை சிஷ்யனுக்கு குரு உபதேசிக்கவேண்டும்.

3 உச்சாரயேத் த்ரிச: தாரம் தக்ஷிணே ச்ரவணே ததா I
ரிஷிச்சந்தோ தெய்வதானி ப்ரூயாத் தஸ்ய க்ரமாத் ஸுதீ: I
அந்தர்யாமீதி காயத்ரீ பரமாத்மேத்யனுக்ரமாத் I

க்ஞானியான அந்த குரு இந்த சிஷ்யனுடைய வலது காதில் ஓம் என்னும் ப்ரணவமந்திரத்தை மூன்று தடவை சொல்ல வேண்டும். அந்த ப்ரணவமந்திரத்திற்கு அந்தர்யாமிரிஷி என்றும் காயத்ரீ சந்தஸ் என்றும் பரமாத்மாதேவதை, என்றும் அதன் ரிஷி சந்தஸ் தெய்வதத்தை வேதத்தில் சொன்ன கிரமத்தின்படி சொல்லவேண்டும்.

4 விச்வஸ்ச தைஜஸ: ப்ராக்ஞ: துர்யஸ்சாக்ஷர தேவதா: II
5 க்ருஷ்ணோ ராமோ ந்ருஸிம்ஹஸ்ச வராஹோ விஷ்ணுரேவச I
பரம் ஜ்யோதி: பரம் ப்ரம்ம வாஸுதேவ இதி க்ரமாத் II
6 அகாராதே: ததா சாந்தாதி சாந்தாம் தஸ்ய தேவதா: I
ஏவமுக்த்வாது தத் த்யானம் குர்யாத் பக்தாய ஸத்குரு: II

ப்ரணவமாகிய ஓம்காரத்திலுள்ள அ, உ, ம என்னும் மூன்று அக்ஷரங்களில் அ என்னும் அக்ஷரத்திற்கு நாராயணருடைய ரூபங்களான விச்வன் என்பவரும், உ என்னும் அக்ஷரத்திற்கு தைஜஸன் என்பவரும், ம என்னும் அக்ஷரத்திற்கு ப்ராக்ஞன் என்பவரும், அதில் உள்ள நாதத்திற்கு துர்யன் என்பவரும் தேவதைகள் ஆவார்கள், என்றால் இவைகளால் இந்த பகவத் ரூபங்கள் சொல்லப்படுவார்கள். இந்த ப்ரணவத்திற்கு மாத்திரைகளான அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து, சாந்தம், அதிசாந்தம், கோஷம் ஆகிய எட்டுக்கு தேவதைகள்— இவைகளால் ப்ரதிபாதிக்கப்பட்ட பகவன்மூர்த்திகள்—கிருஷ்

ணன், ராமன், நாஸிம்ஹன், வராஹன், விஷ்ணு, பரம்ஜோதி, பரப்ரம்மம், வாஸுதேவன் என்பவர்கள். என்று இவ்வாறு சிஷ்யனுக்கு உபதேசம் செய்து தான் சத்குருவானவர் இந்த ப்ரணவ ப்ரதிபாத்யரான பகவானை இவ்வாறு தியானம் செய்யவேண்டுமென்பதை உபதேசிக்கவேண்டும்.

7 அஷ்டபத்ரே து ஹ்ருத்பத்மே மத்யே ஸூர்யேந்து வன்ஹிகம் ।
பீடம் தத்பத்ம மத்யஸ்தம் நாராயண மநுமயம் ॥

எட்டு இதழ்கள் கொண்ட ஹிருதயகமலத்தின் நடுவில் உள்ள கர்ணிகை என்னும் காய்ப்ரதேசத்தில் சூரியமண்டலத்தையும், அதன்மேல் சந்திரமண்டலத்தையும், அதன்மேல் அக்னி மண்டலத்தையும், அதில் பகவானுக்கு ஆஸனமாக ஓர் கமலத்தையும் தியானம் செய்யவேண்டும். அதன் மத்தியில் தோஷ லேசமுமில்லாத பகவான் நாராயணர் இருப்பதாய் தியானிக்க வேண்டும் என்று உபதேசிக்கவேண்டும்.

8 உத்யதாதித்ய ஸங்காசம் தேஜஸாநுபமம் ஸதா ।
ஸஹஸ்ரேணாபி ஸூர்யாணாம் ஸத்க்ராணனந்தநுபிணம் ॥

9 அதிரக்தநளம் பாஸ்வன் நகவ்ராத விபூஷிதம் ।
வ்ருத்தஜங்கம் வ்ருத்தஜாநும் ஹஸ்திஹஸ்தோ ருமீசவரம் ॥

10 மஹாகடி தடாபத்த காஞ்சீ பீதாம்பரோஜ்வலம் ।
ஸுநிம்ன நாபிம் த்ரிவளிம் ஸுவ்ருத்தோதரபந்தனம் ॥

11 விசாலவக்ஷஸம் ப்ராஜத் கௌஸ்துபா முக்தகந்தரம் ।
வனமாலாதரம் ஹாா வைஜயந்த்யாதிபிர் யுதம் ॥

12 ப்ருதுதீர்க்க சதுர்பாஹும் சக்ரசங்க கதாம்புஜை: ।
யுக்தமுன்னித்ர பத்மாக்ஷம் ஸ்புரன் மகரகுண்டலம் ॥

13 பூர்ணசந்த்ராயுதோத்ரிக்த காந்திமன் முகபங்கஜம் ।
ஸுப்ருவம் ஸுலலாடாந்தம் கிரீட பத்தமூர்த்தஜம் ॥

14 நிச்சேஷ துக்கசமனம் நித்யாநந்தம் சுசிஸ்மிதம் ।
விச்வாதீன்சைவ க்ருஷ்ணதீன் ஏவம் பூதான் ஸநாதனான் ।

15 அபின்னானேவ ஸததம் தஸ்மாத் விஷ்ணோ: பராத்மந: ॥
வராபயோத்யதகரான் நித்யாநந்தைக ரூபிண: ॥

பகவானை எப்படி தியானம் செய்ய உபதேசிக்கவேண்டுமென்பது விவரிக்கப்படுகிறது. பகவான் நாராயணர் உதித்த

சூரியனின் காந்தி போலொத்த சரீரகாந்தி பொருந்தியவர். ஆகாயத்தில் ஒரே சமயம் ஆயிரம் சூரியன்கள் உதித்தால் எப்படியோ அந்த காந்திக்கும் ஸமானமில்லாததான காந்தி கொண்டிருக்கிறார். அவர் ரூபம் இல்லாதவர் அன்று. எப்போதும் இருந்துவரும் க்ஞானனந்தாத்மகமான சரீரமுள்ளவர். அந்த சரீரத்தில் பாதம்முதல் மந்தஹாஸம் வரையில் இவ்வாறு இருப்பதாய் உபதேசிக்கவேண்டும். அவருக்குப்ரகாசிக்கும் நகங்களின் சமூகத்தால் விளங்கும் மிகவும் சிவந்த சரணங்கள், உருண்ட கணைக்கால்கள், உருண்ட முழங்கால்கள், யானைத் துதிக்கைபோல் உருண்ட துடைகள். இந்த பகவான் ஈசுவரர்களான பிரம்மருத்திராதிகளுக்கும் ஈசுவரர். பூஜ்யமான இடுப்புப்ரதேசத்தில் அணியப்பட்டிருக்கும் தங்க ஒட்டியாணம் என்ன, பீதாம்பரம் என்ன இவைகளால் பிரகாசிக்கிறார். மிகவும் ஆழமான தொப்புள் கொண்டிருக்கிறார். வயிற்றில் மூன்று மடிகள் விழுந்திருக்கின்றன. மிகவும் உருண்டதான வயிற்றைச் சுற்றி இருக்கும் ஆபரணத்தைக் கொண்டிருக்கிறார். விசாலமான மார்பு, ப்ரகாசிக்கும் கௌஸ்துப மாணிக்யத்தை இடைவிடாது தரித்திருக்கும் கழுத்து. அதில் வனமாலை, முக்தாஹாரங்கள், வைஜயந்திமாலை இவைகளைத் தரித்திருக்கிறார். பருத்தும் முழங்கைவரை நீண்டதுமான நான்கு கைகள். அவைகளில் தக்ஷிண திக்கு முதல் கிரமப்படி சக்ரம், சங்கம், கதை, பத்மம் ஆகிய நான்கு ஆயுதங்களைத் தரித்திருக்கிறார். மலர்ந்த கண்களைக் கொண்டிருக்கிறார். முதலை உருவமுள்ள பிரகாசிக்கும் கர்ணபூஷணங்களைக் கொண்டிருக்கிறார். பதினாயிரம் சந்திரன்களைவிட உத்தமமான காந்தியுள்ள முக கமலமுள்ளவராய் இருக்கிறார். மன்மதனை மோகிக்கும் புருவப்ரதேசமுள்ளவர். அர்த்தசந்திரன்போன்ற நெற்றியால் ரமணீயமாய் இருக்கிறார். கிரீடமணிந்து முடியப்பட்டதான தலை மயிரைக் கொண்டிருக்கிறார். ஸம்பூர்ணமாய் துக்கத்தைப் போக்குபவரும் ஸ்வரூப ஆனந்தத்தை வெளியாக்குபவரும் சுத்தமான மந்தஹாஸமுள்ளவருமான பகவானை மேற்கண்டவாறு தியானிக்க வேண்டுமென உபதேசிக்க வேண்டும். மேற்சொன்ன விச்வன், தைஜஸன், ப்ராக்ஞன், துர்யன் என்னும்

ப்ரணவத்தின் அக்ஷர தேவதைகளும் சரியே, அகாரம் முதற் கொண்டுள்ள மாத்திரைகளின் தேவதைகளான கிருஷ்ணாதி தேவதைகளும் சரியே, எல்லோரும் தனித்தனியானவர்களன்று. எல்லோரும் பேதமில்லாதவர்கள். எல்லோருமே உத்யாதித்ய ஸங்காசம் என்றபடி ரூபங்கொண்டவர்கள். இந்த ரூபங்கள் புராதனமானவைகள், வேதங்களில் சொல்லப்பட்டவைகள். ப்ரணவத்தின் தேவதையான பகவானிடமிருந்தும் அபின்னர் கள். நித்யானந்தமே சரீரமாகக் கொண்ட இவர்கள் வரஹஸ் தம் அபயஹஸ்தமுடையவர்கள் என்றும் உபதேசிக்கவேண்டும்.

(தொடரும்)

ஆசாரமாலை

(முன் 80ம் பக்கம் தொடர்ச்சி)

த்யான ஸ்நானம்

சுத்தி என்பது வெளி சுத்தி உள் சுத்தி என்று இரண்டு வகை உண்டு. வெளி சுத்தியாகிய பாஹ்ய சுத்தி ஜலத்தில் ஸ்நானம் முதலான வைகளால் ஏற்படுகிறது. ஆந்தர சுத்தி த்யான ஸ்நானம் என்பதால் ஏற்படும். சரீரத்தில் இருக்கும் பாப புருஷனை சோஷித்து தஹித்து அவனை விஸர்ஜனம் செய்துகொண்டால் ஆந்தர சுத்தி ஏற்படும். அதன் பின்தான் ஸந்தியாவந்தனம் ஜபதபாதிகளைச் செய்யவேண்டும். அதன் விவரம் பின்னடி சொல்லப்பட்டிருக்கிறது. ஆந்தர சுத்தி இல்லாதவனுக்கு வெளி ஸ்நானம் எந்த பலனையும் தராது. 'அந்தச் சுத்தி விஹீனஸ்ய பாஹ்ய சுத்திர் வ்ருதா வ்ருதா' என்று ஒரு பிரமாணம் உறுதிகூறுகிறது. ஜலத்தில் ஸ்நானம் செய்வதைக் காட்டிலும் த்யான ஸ்நானம் உத்தமமான தென்றே உபநிஷத்துக்களால் தெரியவருகிறது. கோவிந்த கோவிந்தா என்று பகவானுடைய நாமாவை உச்சாரம் செய்வது த்யான ஸ்நானம் என்று ஓர் நூல் அறிவிக்கிறது. அநந்த ஸூரியனைப்போல் சரீர காந்தி கொண்டு கிரீடம் வனமாலாதிகளைத் தரித்த புண்டரீகாக்ஷனை பகவான் ஹ்ருதயத்தில் இருப்பதாயும், அவருடைய பாதாரவிந்தத்தால் உண்டான உதகதாரை தன்னுடைய சிரத்தின்மீது விழுந்து, ப்ரம்மரந்த்ரத்தின் வழி யாய் தன் சரீரம் பூராவிலும் பரவி, தன்னை ஸ்நானம் செய்வதாயும், த்யா

னித்தால், அதனால் சரீரத்தின் உட்புறத்திலுள்ள தோஷம் எல்லாம் நீங்கி ஸ்படிகம்போல் சுத்தனாகி விடுவான் என்றும் கூறப்படுகிறது. ஹ்ருதய கமலத்திலுள்ள பிம்பமூர்த்தியையும் ஸூர்ய மண்டலத்திலுள்ள பகவன் மூர்த்தியையும் தியானிப்பதும், சரீரத்தில் நீருண்ட மேகம்போல் காந்தியுடையவரும் சதுர்புஜமுள்ளவருமான வாஸுதேவனை தன் சரீரத்தில் தியானிப்பதும் த்யான ஸ்நானம் என்று யோக யாக்ஞ்யவல்க்யர்கள் அபிப்ராயப்பட்டிருக்கின்றனர்.

மற்றொரு வகை த்யான ஸ்நானமும் உண்டு. தன் சரீரத்தில் புண்ய நதிகள் புண்ய க்ஷேத்திரங்கள் இருப்பதாய் அனுஸந்திப்பதும் த்யான ஸ்நானம் ஆகும். இப்பாரத பூமியில் ஸப்த புரிகள், மூன்று க்ராமங்கள், நவ ஆரண்யங்கள், ஒன்பது ஊஷரங்கள், சதுர்தச குஹ்ய ஸ்தானங்கள் ஆகிய இவைகள் முக்தி ஸ்தானங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அயோத்யை, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை இவைகள் முக்தி ஸ்தானங்களான ஸப்த புரிக்கள். ஸாலக்ராமம், சம்பள க்ராமம், கோஸலத்திலுள்ள நந்திக்ராமம் ஆகிய இம்மூன்றும் முக்தி ஸ்தானங்களான கிராமங்கள். தண்டகாரண்யம், ஸந்தவாரண்யம், ஜம்பு மார்க்கம், புஷ்கரம்,உத்பலாவர்த்தம், நைமிஷம், குருஜாங்கலம், அற்புதம், ஹிமவான் ஆகிய இந்த ஒன்பது ஸ்தலங்களின் ஆரண்யம் முக்தி ஸ்தானமாகும். ரேணுகா, ஸூகரம்,காசி, காலி, காலேச்வரம், வடம், ஈசுவரம், காலஞ்ஜரம், மகாகாலம் என்று ஒன்பது புண்ணிய ஊஷரங்கள் முக்தி ஸ்தானங்கள். கோகா, குப்ஜா, அற்புதம், மணிகுண்டம், ஸாலக்ராமம், ஸூகரம், மதுரா, மாயா, விஷ்க்ரமணம், லோஹா, அர்கலம், போதநாயகர், ப்ரபாஸம், பதரி ஆகிய 14 குஹ்ய ஸ்தலங்கள் முக்தி ஸ்தானங்கள். இவைகள் எல்லாம் புண்ய தீர்த்தங்கள் புண்ய க்ஷேத்ரங்கள் என்று வராஹ மூர்த்தி பகவானால் பூதேவிக்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் தன் சரீரத்தில் மனுஷ்ய சரீரத்திலேயே இருப்பதாய் தியானிப்பது தியான ஸ்நானம் ஆகும் எனப்படுகிறது. இவ்வாறு தியானிப்பதால் மேற்கண்ட தீர்த்த க்ஷேத்திரங்களில் எல்லாம் ஸ்நானம் செய்த புலன் ஏற்படும். சரீரத்திலேயே இவைகள் இருக்கும் விவரங்களாவன:—

அயோத்யா என்பது அஷ்ட சக்ரங்கள் நவத்வாரங்களைக்கொண்டது தேவாதிகளின் பட்டணம் என்று தைத்திரீய சுருதி அறிவிக்கிறது. இந்த சரீரம் பூராவுமே அயோத்யை ஆகும். மதுராவில் பகவான் கிருஷ்ணர் ஆவிர்பவித்தார். அவ்வாறு எமது ஹ்ருதய சக்ரமே மதுரா எனப்படும். ஆதார சக்ரங்களில் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் இருக்கும் மூலாதார

சக்ரம் மாயா என்றும், சிரஸ்ஸிலுள்ள ஆக்ஞா சக்ரம் காசி என்றும், மணி பூரணம் அவந்தி என்றும், விசுத்தா த்வாரகை என்றும், ஆகிய முக்தி ஸ்தலங்களான ஸப்த புரிக்கள் சரீரத்தில் இருப்பதாய் த்யானிக்கவேண்டும். கழுத்து முதல் கால் வரையில் சாலக்ராமம் என்றும், கழுத்து முதல் இடுப்பு வரையில் ஹரி மந்திரமான சம்பள க்ராமம் என்றும், சிரஸ் முதல் கழுத்து வரையில் நந்திக்ராமம் என்றும், க்ஞானிகள் அறிகின்றனர். உபஸ்தத்தில் வளர்ந்திருக்கும் ரோமங்கள் தண்டகாரண்யம் என்றும், இடுப்புப் பிரதேசத்திலுள்ள ரோமங்கள் ஸைந்தவாரண்யம் என்றும், மோவாக்கட்டையில் இருக்கும் ரோமங்கள் ஜம்பு மார்க்கம் என்றும், ஹ்ருதயத்திலுள்ள ரோமங்கள் புஷ்கரம் என்றும், காதுகளில் உள்ள ரோமங்கள் உத்பலாவர்த்தம் என்றும், சரீரத்தின் உத்தர பாகம் நைமிஷாரண்யம் என்றும், தக்ஷிண பாகம் குருக்ஷேத்ரம் என்றும், இடது கக்ஷத்தில் உள்ள ரோமங்களுக்கு குருஜாங்களம் என்றும், வலது கக்ஷத்தில் உள்ள ரோமங்கள் அர்புகானனம் என்றும், தலை மயிர் எல்லாம் ஹிமவத்கிரி கானனம் என்றும், க்ஞானிகள் அறிகின்றனராதலால், பரத கண்டத்திலுள்ள ஒன்பது புண்யாரண்யங்களும் சரீரத்திலேயே இருப்பதாய் தியானிக்கவேண்டும். கழுத்துக் குழியில் ரேணுகாவும், நாஸிகையில் ஸூகரமும், புருவ மத்தியில் ஆனந்த வனமாகிய காசியும், இடது உள்ளங்காலில் காலியும், வலது உள்ளங்காலில் காலேச்வரமும், இரண்டு கால்களில் வடேச்வரங்களும், நெற்றியில் காலஞ்ஜரமும், நாபி ப்ரதேசத்தில் பரமசிவன் வசிக்கும் மகாகால க்ஷேத்திரமும் ஆகும் என்றும் க்ஞானிகள் அறிவார்கள். வலது மூக்கில் கோகா க்ஷேத்திரமும், மலவாயிலில் குப்ஜா க்ஷேத்திரமும், கடி ப்ரதேசத்தில் அர்புதாசலமும், மூக்கின் நுனி மணி கர்ணிகையும், நெற்றி மத்தி த்வாரகையும், முகம் கயா க்ஷேத்திரமும், லிங்கப்ரதேசம் நிஷ்க்ரமண க்ஷேத்திரமும், பற்களின் வரிசை லோஹம் அர்கல க்ஷேத்திரங்களும், நாக்கு போதஸ்வாமியும், கழுத்தும் கன்னமும் சேரும் ஸ்தானம் ப்ரபாஸ க்ஷேத்திரமும், ஹ்ருதயம் ப்ரம்ம க்ஷேத்திரமாகிய பதரீ என்றும், சரீரம் முழுவதுமே மானஸ ஸரோவரம் என்றும் ஆகிய 14 குஹ்ய க்ஷேத்திரங்கள் சரீரத்தில் இருப்பதாய் அறியவேண்டும். இவ்வாறு சிந்தனை செய்த மாத்திரத்தில் இவ்வளவு தீர்த்த க்ஷேத்திரங்களின் ஸ்நான பலன் கிடைக்கும். வித்வான்களின் வாக்கின்படி நடப்பது. அதில் ஸரஸ்வதி நதி இருப்பதால் அது ஸாரஸ்வத ஸ்நானம் என்றும் எல்லா ஸ்நானங்களைச் செய்ய அது முதலில் பாவித்ரமாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் பகவான் விசேஷ ஸாந்நித்யம் பெற்றிருக்கும் ஸ்வயம் வியக்தமாய் இருக்கும் 108 ஸ்தானங்கள் இன்னதென்பது பவிஷ்யோத்தர புராணத்தில் சொல்லப்பட்டிருப்பது அறிவிக்கப்படுகிறது. வைகுண்டத்தில் வாஸுதேவர்; அதில் மோதத்தில் ஸங்கர்ஷணர் ப்ரமோதத்தில் ப்ரத்யும்னர், ஸம்மோகத்தில் அநிருத்தர், ஸத்ய லோகத்தில் விஷ்ணு, சூர்ய மண்டலத்தில் பத்மாக்ஷர், க்ஷீராப்தியில் சேஷசயனர் ச்வேதத்வீபத்தில் தாரகர், பதரியில் நாராயணர், நைமிஷாரண்யத்தில் ஹரி, அச்யுதன், ஸாலக்ரம க்ஷேத்திரம் பூராவுமே ஹரிக்ஷேத்திரம். அயோத்தியில் ராமர், மதுரையில் பாலகிருஷ்ணன், மாயா க்ஷேத்திரத்தில் மதுசூதனர், காசியில் போகசயனர், அவந்தியில் அவனீபதி, த்வாரகையில் யாதவேந்திரர், ப்ரபா க்ஷேத்திரத்தில் கோபீஜன ப்ரியன், பிருந்தாவனத்தில் நந்தகுமாரன், கோகுலத்தில் கோவிந்தன், கோவர்த்தனத்தில் கோபாலன், பயநாசனன், கோமந்த பர்வதத்தில் சௌரி, ஹரித்வாரத்தில் ஜகத்பதி, ப்ரயாகையில் மாதவன், கயையில் கதாதரன், கங்கா ஸாகர ஸங்கமத்தில் விஷ்ணு, சித்திரகூடத்தில் ராகவன். நந்திக்ராமத்தில் ராக்ஷஸக்னன், ப்ரபாஸத்தில் விஷ்ணு, குருக்ஷேத்திரத்தில் விச்வரூபி, ஜநார்த்தனர், புஷ்கரத்தில் புண்டரீகாக்ஷன், காகுலத்தில் ரகுநாயகன், ஸ்ரீ கூர்மத்தில் கூர்மன், தன்ய பர்வதத்தில் மங்கள ந்ருஸிம்ஹர், புருஷோத்தம க்ஷேத்திரத்தில் ஜகந்நாதன், புவனேச்வரத்தில் ஸுந்தரன், தர்மபுரியில் நரஸிம்ஹன், யோகாநந்தன், பாபநாசன். மகாலக்ஷ்மீ க்ஷேத்திரத்தில் வரத ந்ருஸிம்ஹன், பாண்டுரங்க க்ஷேத்திரத்தில் விட்டலன், ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதன், ஜானகீபதி, ஹைமவதி நதிதீரத்தில் ந்ருஸிம்ஹன், கிருஷ்ணபுரியில் மகாவிஷ்ணு, பக்திஸ்தானத்தில் கேசவன், அநந்தகிரியில் வரநாதன், கருடகிரியில் அஹோபிலத்தில் ஹிரண்யனைக்கொன்ற நரஸிம்ஹன், சேஷாசலத்தில் லக்ஷ்மீவெங்கடேசன், யாதவகிரியில் நாராயணர், கடிகாசலத்தில் நரஸிம்ஹன், இக்ஷ்வாரண்யத்தில் வீராகவன், ஹஸ்தகிரியில் காஞ்சியில் வரதராஜன், பார்த்தஸாரதி, த்ரிவிக்ரமன், பரமேசன், அஷ்டபுஜ நரஸிம்ஹன், பக்ஷி தீர்த்தத்தில் பானு, விஜயராகவன், பாண்டவவாஸ க்ஷேத்திரத்தில் த்ரிவிக்ரமன், ஸ்ரீமுஷ்ணத்தில் மகாவராஹன், மகேசன், பத்மகுலாசனன், சித்ரகூடத்தில் கோவிந்தன், வீரநாராயணர், குருகையில் ஸ்ரீபதி, ரங்கத்தில் நாகசயனர், நாயகநாயகர், வைகுண்டர், சவேதஹ்ரதத்தில் சாந்தமூர்த்தி, மதுரையில் ஸுந்தரன், தைத்யாரி, பக்திஸாரத்தில் காளமேஹன், காவேரி தீரத்தில் ரங்க க்ஷேத்திரங்களில் நாகநாதன், ரங்கேசன், உத்பலாவர்த்தத்தில் சௌரி, மணிகூடத்தில் மணிப்ரபன், வ்யாக்ரபுரியில் மஹாபாஹு, ஆகாசநகரத்தில் ஹரி, சக்ர தீர்த்தத்தில்

(கும்பகோணத்தில்) சக்ரபாணி, கும்பகோணத்தில் சாரங்கபாணி, பாபநாசத்தில் கேசவன், சித்திக்ஷேத்திரத்தில் நரஸிம்ஹன், நீலமேஹன், ஸ்ரீநிவாஸ ஸ்தலத்தில் பூர்ணன், தேவ மந்திரத்தில் ஸுவர்ணன், ஸாரக்ஷேத்திரத்தில் ஸாரநாதன், கோபபுரியில் கோபதி, லக்ஷ்மீ க்ஷேத்திரத்தில் விபீஷணனுக்கு வரத்தை அளித்த ரமாநாதன், தர்பசயனத்தில் ராகவன், சுசீந்திரத்தில் தேவதேவேசன், ஸ்ரீவைகுண்டத்தில் மாதவன், தாம்பிரபர்ணி தீரத்தில் எட்டு விஷ்ணு ஸ்தானங்கள்—திருப்பதிகள், கன்யாகுமாரியில் பரபிரம்மம், ப்ரம்ம க்ஷேத்திரத்தில் ஜநார்த்தனன், தர்மாரண்யத்தில் விருத்தப்ராம்மண ரூபி பகவான், அநந்தசயனத்தில் பத்மநாபன். இந்த விஷ்ணு ஸ்தானங்களையும் இங்குள்ள பகவன் மூர்த்திகளையும் பக்தியுடன் ஒருவர் ஸ்மரித்தால் ஸமஸ்த வேதங்களை அத்யயனம் செய்த பலனும் எல்லா யக்ஞங்களைச் செய்த பலனும், ஸமஸ்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலனும் ஏற்பட்டு வைகுண்ட ப்ராப்தி ஆகும் என்று சுகரும் வியாஸரும் ஸம்பாஷித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (தொடரும்).

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸங்கிரஹ ராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்

4வது ஸர்க்கம்

(முன் 107ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வாறு தாரையும் பிள்ளையான அங்கதனும் போட்ட அழுகை சப்தத்தால் வாலி சிறிது விழிப்பு அடைந்து மெதுவாய் பேசினன். "குழந்தாய் ஸுக்ரீவ! முட்டாளைப்போல் தெய்வ வசமாய் நான் முன்பு உனக்கு அபசாரம் செய்திருந்தாலும் என்னிடம் துவேஷத்தைக் வைக்காதே. அங்கதனை உன் பிள்ளையாக எண்ணுவாய். சத்ருவின் பிள்ளை என்று எச்சமயமும் எண்ணாதே. ஓரே வயிற்றில் பிறந்த சகோதரர்களுக்கு ஒருவனுக்கு பிள்ளை என்றால் அவன் தன் பிள்ளையே ஆவான். இந்த வானர ஸாம்ராஜ்யத்தை நீயே அனுபவி. அங்கதனை யுவராஜாவாய்ச்

செய்துகொள். மகா புத்திசாலியான ஸுஷேனரின் குமாரியான தாரையை அவமானப்படுத்தாதே. இஹத்திலும் பரத்திலும் உனக்கு ஐசுவரியம் உண்டாகவேண்டுமானால், இந்த ராமசந்திரனுக்கு எப்போதும் தாஸனாய் இரு. இந்த ராகவன் எல்லாப் பிராணிகளுக்கும் நாதன். ப்ரகிருதியைவிட உத்தமன், புருஷோத்தமன். ராமனுடைய கார்யத்தில் எச்சமயத்திலும் அசட்டையாய் இருக்காதே. அங்கதா! ராமருக்குப் பிரியமாய் நடக்கும் ஸுக்ரீவனை எப்போதும் அனுசரித்து நட. ஜகத் ஸ்வாமியான ராமசந்திரா! இதோ என் பிள்ளையை உம்மிடம் அர்ப்பணம் செய்திருக்கிறேன். என் கழுத்தில் தரித்திருக்கும் இந்திரனால் கொடுக்கப்பட்ட இந்த மாலையை சுக்ரீவனுக்குக் கொடுங்கள்'' என்று சொல்லி மாலையைக் கழற்றி க்ஞானியான வாலி அந்த மாலையையும் தன் சரீரத்தையும் அர்ப்பணஞ் செய்தான். வாலி இவ்வாறு சொல்லி எல்லா வஸ்துக்களிலும் தன் அபிமானத்தை விட்டு ஸர்வஸங்க பரித்யாகம் செய்து தன் இரு கண்களால் ராகவனின் ரூபமாகிய அமிர்தத்தை தன் மனமாகிய குடத்தில நிரப்பிக்கொண்டு தன் மூல ரூபமான மகேந்திரனின் தன்மையை இந்திரபுத்திரனான வாலி அடைந்தான்.

4-வது ஸர்க்கம் முடிந்தது.

5வது ஸர்க்கம்

சுக்ரீவன் தன் தமயன் வாலி இறந்துவிட்டதை அறிந்து ஸுஸ்வரமாய் வாய்விட்டு அழுது தமையனின் காலில் விழுந்து அதிகமாய் ப்ரலாபம் செய்தான். பர்த்தா இறந்துவிட்டதைப் பார்த்து தாரை ப்ரலாபம் செய்து பாணத்தோடு கூடிய அந்த சரீரத்தை கட்டிக்கொள்ள அணுகினாள். தாரையின் அந்த துணிச்சலைக்கண்டு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் நீலன் தடபுடலாய் வாலியின் சரீரத்திலிருந்து அந்த பாணத்தைப் பிடுங்கினான். பாரியாளான தாரை தன் பர்த்தாவான வாலியின் சரீரத்தை அணைத்துக் கட்ட, வாலியின் சரீரத்தினின்றும் பெருகும் ரக்த வெள்ளம் அவளை நனைத்துவிடவும், "குழந்தையான அங்கதா! உன் தந்தைக்கு ப்ராணோத்க்ரமணம் ஆகி அவர் ஸ்வர்கம் செல்கிறார். அவருக்கு நமஸ்காரம் செய்'' என்று சொன்

னான். வெகு ஆவலோடு அங்கதன் எழுந்துவந்து தந்தைக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். அதைக் கண்டு மிகுந்த துக்கத்துடன் கண்ணால் ஜலம் பெருகவிட்டு தாரை மறுபடியும் பேசினாள். "குழந்தாய்! சிரஞ்சீவியாய் இரு" என்று பதிவ்ரதையான அந்த தாரை சொல்லிவிட்டு, அவ்விடமிருந்த மந்திரிமார்களிடமும், வேலைக்காரர்களிடமும் அனுமதி பெற்று அடியிற் கண்டபடி பேசினாள். (தொடரும்)

ஓர் கண்டனம்.

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால் ஸ்ரீமான் B N. கிருஷ்ணமூர்த்தி சர்மா M. A. அவர்கள் அறிவித்திருப்பதன் சாராம்சமாவது:—

பிரம்மா வழியாகத்தான் முக்தி வரவேண்டும் என்று ஸ்ரீ மத்வாசாரியார் சொல்லிவிட்டதாய் தற்போதுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தின் ஜீயர் ஸ்வாமிகள் கண்டனம் செய்திருக்கிறார் என்று பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்திருக்கிறது. அவர் அதைப் பிரம்மா வாய் பிளக்கிறார் என்று பரிகாசம் செய்திருப்பது அவருடைய பீடத்திற்கும் பாண்டித்யத்திற்கும் பொருந்தமானதன்று. ஸ்ரீ மத்வாசாரியார் சொன்ன ப்ரமேயத்தில் புதியதாகவும் ஒப்புக்கொள்ளத் தகாததாயுமுள்ள அம்சம் இல்லை. ஸ்ரீமான் Dr. நாகராஜ சர்மா அறிவித்திருக்கிறதுபோல் தைத்திரீய உபநிஷத்தின் "ஸோச்னுதே ஸர்வான் காமான் ஸஹ பிரம்மணா விபஸ்சிதா" என்னும் வாக்யத்தின்படி மோக்ஷத்தில் சதுர்முகன் கூட இருப்பதை விலக்கிவிடமுடியாததாகும். மற்றும் பிரம்மசூத்திரத்தில் இதை ஸ்ரீ வேதவ்யாஸர் 'கார்யம் பாதரிரஸ்ய கத்யுபபத்தே:" என்னும் சூத்திரத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஸ்ரீ மத்வாசாரியாரை ஒதுக்கிவிட்டாலும், ஸ்ரீ சங்கராசாரியாரும், ஸ்ரீ ராமானுஜாசாரியாரும்கூட இந்த ஸூத்திரத்தின் அவரவர்களின் பாஷ்யத்தில் இதை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். மேலும் இந்த

அபிப்பிராயத்துக்கு ஆதாரமாய் ஓர் ஸ்மிருதி வசனத்தையும் ஸூத்ரகாரரான ஸ்ரீ வியாஸரே "ப்ரம்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே | பரஸ்யாந்தே க்ருதாத்மான: ப்ரவிசந்தி பரம் பதம்" என்று காட்டியிருக்கிறார். இதையும் எல்லா வ்யாக்யாதாக்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். மேலும் சங்கராசாரியார் ஹிரண்யகர்பருடைய லோகத்தில் சிறிது காலம் வசித்து பக்வமான அறிவை முக்தியோக்யர்கள் பெற்று அவருடனேயே முக்தியை அடைகின்றனர் என்றும் இது க்ரம முக்தி ஆகும் என்றும் "கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரமபிதானாத்" என்னும் ஸூத்திரத்தின் பாஷியத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். "ப்ரம்மா தேவானாம் ப்ரதம: ஸம்பபூவ யே ப்ரம்மாணம் விததாதி பூர்வம்" என்று சுருதி இருப்பதைக் கொண்டு ப்ரம்மா பகவானுடைய பிள்ளையானதால் ஸகல ஜீவராசிகளையும் பகவானிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் காரியத்தைக் கைக்கொண்டது நியாயமே ஆகும். ஆக மேற்சொன்னபடி ஸ்ரீமத்வாசாரியார் சொன்ன ப்ரமேயம் மற்ற எல்லா ப்ராமாணிகர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாய் சித்தமாகிறது. இப்படியிருக்க மேற்கண்ட பீடாதிபதிகளைப் போன்ற ஸ்வாமிகள் ஸ்ரீமத்வாசாரியார் சொன்ன ப்ரமேயத்தை, அக்ஞானத்தில் இவ்வளவு துணிவு அடைந்து கண்டிக்க முன்வந்தது வருந்தத்தக்கதாய் இருக்கிறது.

ஓர் செய்தி.

25-9-43உயன்று திருப்பூர் மாத்வ மகாஜனங்கள் ஸ்ரீ வீரராகவ பெருமாள் கோயிலில் ஸ்ரீமான் T. S. வெங்கடரமணய்யா B.A., L.T., அவர்களின் தலைமையின்கீழ் ஓர் கூட்டம், கூடி திருப்பூர் ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்த சபை என்று மாத்வர்களின் சங்கம் ஒன்று ஆரம்பிக்க முடிவு செய்து, மறுநாள் அதற்கு விதிகளை ஏற்படுத்திக்கொண்டதுடன், அதன் காரிய நிர்வாகத்திற்கு முக்யஸ்தர்களான ஸ்ரீமான்கள் N. கோபால்ராவ் B.A., B.L., C. M. V. ஜயீந்திராசார்யார் B.A., L.T., முதலியவர்களைக் கொண்ட ஓர் கமிட்டியையும் தேர்ந்தெடுத்திருப்பதாயும், அவ்வூரில் ஓர் ஆஞ்ஜனேயரின் கோயில் பிரதிஷ்டை செய்ய தீர்மானம் செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிவிப்பு.

கடுமையான காகிதப்பஞ்சத்தால் எமது மித்திரன் சஞ்சிகைகள் சந்தாதாரர்களின் சங்கியைக்குத் தகுந்தபடிதான் அச்சடிக்கப்படுகின்றன என்றும் தனிக்காப்பிகள் மீண்டும் கேட்கப்பட்டால் அனுப்ப சாத்யமில்லாமல் இருக்கிறதன்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அந்த சஞ்சிகை வரவில்லை, இந்த சஞ்சிகை அனுப்பப்படவில்லை என்று எங்கள் மீதே குற்றம் கூறி சஞ்சிகைகளை மீண்டும் அனுப்ப ஒரு சிலர் நிர்பந்தம் செய்கின்றனர். அதிக காப்பிகள் இல்லாததன் நிமித்தம் அவைகளை அனுப்ப சாத்யம் இல்லாமல் இருக்கிறது. ஒரே நாளில் ஒரே சந்தர்பத்தில் எல்லா சந்தாதாரர்களுக்கும் பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. மேல் விலாஸங்களும் சோதிக்கப்படுகின்றன. அப்படியிருக்க ஒன்றிரண்டு நபர்கள் மட்டில் அவைகளைப் பெறவில்லை என்றால் அதற்கு அவர்களே ஜவாப்தாரியாவார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆதலால் சந்தாதார நேயர்கள் நாம் அனுபவித்துவரும் காகித கஷ்டத்தை உணர்ந்து தம் தம் விலாஸத்தை நாம் எழுதிவருவதை மற்றொரு தரம் சோதித்து, விவரம் பூராவாய் இல்லாதிருந்தால் அதை அறிவித்துவிட்டு பத்திரிகைகள் சரியாய் அடையச்செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கோருகிறோம். தவறிப்போன சஞ்சிகைக்கு இரண்டு மடங்கு கிரயம் கொடுத்தாலும், காபிகள் இல்லாததால் அனுப்பப்படுவது சிரமமாய் இருக்கிறது. சரியான விலாஸம் கொடுத்தும் சஞ்சிகைகள் கிடைக்காதிருந்தால் அந்தந்த தபாலதிகாரிகளுக்கு புகார் எழுதி எமக்கும் அறிவித்துவிட ப்ரார்த்திக்கிறோம். நாமும் வேண்டிய எத்தனம் செய்யத் தயாராய் இருக்கிறோம். [மா. மி.

விசேஷ தினங்கள்.

16—11—43	மங்களவாரம்	துலாஸ்நானம் பூர்த்தி.
23—11—43	மங்களவாரம்	ஏகாதசி உப.
27—11—43	சனிவாரம்	தர்சம். திலதர்ப்பணம். விஷ்ணுப. உப.
2—12—43	குருவாரம்	ச்ரவணம் உப. விஷ்ணுப. உப. ஆரம்பிக்கப்படலாம்.
3—12—43	சுக்ரவாரம்	ஸ்கந்தஷஷ்டி
7—12—43	மங்களவாரம்	ஏகாதசி உப.
11—12—43	சனிவாரம்	பௌர்ணமி. விஷ்ணுப. உப.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

• ஸ்ரீ ராகவேந்திரஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்) 2-ம் பதிப்பு	0	3	0
2. ஷை ஸ்தோத்திரம் உள்பட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்)	0	8	0
3. ஸ்ரீவாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன் 2-ம் பதிப்பு	0	5	0
4. மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது	0	3	0
5. துவைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆப்டோன் படத்துடனும் தமிழ்)	0	2	0
6. கும்பகோண மாஹாத்மியம் (தமிழ்)	0	2	0
7. ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்)	0	4	0
8. மாத்ருகாமாலாஸ்தவம், ரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்)	0	2	0
9. மாத்வ புருஷர்களின் அவஸர பூஜா பத்ததி	0	4	0
10. ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத் கீதாதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும், தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள்	0	8	0

11. மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வால்யங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது மணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம் ஸந்தியாவந்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீராகவேந்திரர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அனுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினாயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V. P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவுதனி. முன்விலை ரூ. 21 தற்போது ரூ. 5—0—0 தான்

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

டி. எஸ். ஆர்.
அண்டு
கம்பெனி,
கும்பகோணம்.

ஸ்தாபிதம்
1909

தந்தி விலாசம்
"கோகுல்"

எங்கள் வாஸனு திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

- வாஸனைப் பாக்கு
- வாஸனைச் சுண்ணும்பு
- வாஸனைப் புகையிலை
- ஸ்னோப்பவுடர்
- கேஸர் பவுடர்
- அம்பர், அரகஜா
- தசாங்கம்
- பலகாய்கறி ஊர்காய்கள்
- ரோஜாப்பூ குல்கந்து
- ஷர்பத் தினுசுகள்
- கொப்பரைச்சீவல்
- கோகுல் கூந்தல் [தைலம்
- பற்பொடி
- ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரை விதைத்தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed by N. Subramania Iyer, at Sri Venkateswar Power Printing Works.
Edited & Published by ᵘhagavatha Renganathachariar, Kumbakonam.